**பத்திரிக்கை செய்தி**

# ஆன்மீக ஆர்வலரா நீங்கள்?

## இதோ, பெப்பர்ஸ் டி.வி.யில் உங்களுக்கான புதிய நிகழ்ச்சி அறிமுகம்

# 'தினம் தினம் தரிசனம்'

சென்னை, பிப்ரவரி 2012

இளைஞர்களை தன்வயமாக்கிக் கொண்டுள்ள தமிழ்ப் பொழுதுபோக்கு அலைவரிசையான **பெப்பர்ஸ் டி.வி.** (Peppers TV), **'தினம் தினம் தரிசனம்'** என்ற புதிய ஆன்மீகத் தொடரினை ஒளிபரப்புகிறது. நேரடியாக ஆலயத்திற்குச் சென்று தரிசிப்பது போன்ற உணர்வினை நேயர்களிடையே ஏற்படுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சி உருவாக்கப்பட்டுள்ளது.

உயர்ந்தோங்கி நிற்கும் கோபுரங்கள் முதல், கர்ப்பகிரகத்தில் ஒளிரும் எண்ணெய் தீபத்தின் ஒளியில் இறைவனின் திருவுருவத்தை தரிசிப்பது வரை காண்போரை பக்திப் பரவச நிலைக்கு எடுத்துச் செல்வதாக இந்த நிகழ்ச்சி அமைந்துள்ளது. **திங்கள் முதல் ஞாயிறு வரை மாலை 6.30 மணி**க்கு ஒளிபரப்பாகும் இந்த **அரை மணி நேர நிகழ்ச்சி**, இறை அருளை இல்லங்களுக்கு நேரடியாக கொண்டு செல்கிறது.

'தினம் தினம் தரிசனம்' நிகழ்ச்சியின் வாயிலாக பல்வேறு பழங்காலக் கோயில்கள், அரிய தகவல்களுடம் கூடிய திருத்தலங்கள் ஆகியவற்றை நேயர்கள் பார்த்து மகிழலாம். தெற்கே இராமேஸ்வரம் முதல் வடக்கே டெல்லி வரை உள்ள புகழ் பெற்ற திருத்தலங்கள் பற்றியும், அவற்றின் சிறப்பு பற்றியும் அறிய இந்நிகழ்ச்சி உதவும்.

திருவண்ணாமலை, இராமேஸ்வரம், மதுரை மீனாட்சி அம்மன் கோவில், மலேசியா பத்து மலை முருகன் கோவில், நவக்கிரக கோவில் ஆகியவற்றின் வரலாறு, கடவுளர் பற்றிய நம்பிக்கைகள், அன்றாட சடங்குகள், அவற்றைப் பற்றிய பழங்கதைகள் ஆகியவை நேயர்களுக்கு பெரிதும் ஆர்வத்தை ஊட்டக்கூடியதாக இருக்கும்.

இளைஞர்களையும், இதயத்தில் இளமையாக உள்ளவர்களையும் இலக்காகக் கொண்டு தமிழில் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை அளித்து வரும் பெப்பர்ஸ் பொழுதுபோக்குத் தொலைக்காட்சி, **'சென்னைப் பட்டினம்', 'பாடல் பிறந்த கதை', 'நிழலும், நிஜமும்'** உள்ளிட்ட பல்வேறு சுவையான நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகிறது. இந்தத் தொலைக்காட்சியை **http://m.pepperstv.com** என்ற முகவரியில் செல்போன் வழியாகவும் பார்த்து மகிழலாம். இது தவிர **www.pepperstv.com** என்ற இணையதளத்திலும் பார்க்கலாம்.

---

Contact: Peppers TV @ 044 4906 7777